SRI A. IYANAR :—" கனம் மந்திரி அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு நிலம் ஒதுக்கியதற்காக நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் மனுக்களே வரவில்லை என்று சொல்லுவதைத்தான் நான் மறுக்கிறேன். ஹரிஜனங்களுடைய பிரச்னையைச் சற்று கவனித்து அவர்களுக்கு ஒரு ஐந்து ஏக்கராவது வீடு இல்லாத மக்களுக்கு வசதி செய்துகொடுத்து பின்னர் பள்ளிக்கூடங்களுக்கு வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இம்மாதிரி யெல்லாம் பேசுவது கனம் அங்கத்தினர் ஹரிஜனங்களுக்கு உண்மையாக சேவை செய்வதாகாது. நான் எந்தக் கேள்விக்கு பதில் அளித்தேன் என்பதை கவனிக்கவேண்டும். அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை என்றுதான் சொன்னேன்."

8–50 a.m. SRI M. P. SUBRAMANYAM :—" இந்த சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடத்திற்கு ஏற்கனவே தன்வசம் நிலங்கள் இருந்தும், தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்காக விட்டுவிட்டு, சர்க்காரிடத்தில் இனமாக, குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்ற காரணத்தினால் அரசாங்கத்திடமிருந்து 25 ஏக்கர் நிலம் வாங்கியிருப்பது உண்மையா ? மற்றொன்று . . ."

MR. SPEAKER :—" I will call the hon. Member again."

THE HON. SRI M. BHAKTAVATSALAM—" அதுபற்றி தனியாக கேள்வி கேட்டால் பரிசீலனை செய்து பதில் சொல்லுகிறேன்."

SRI M. P. SUBRAMANYAM :—" சர்க்காருக்கு விண்ணப்பம் வந்ததா என்று கூறினால், சர்க்கார் என்பது மந்திரிகளேதான் குறிப்பிடுமா ? அல்லது ஜில்லா வெல்பேர் ஆபீசர்கள், டைரக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர் ஆபீசர் போன்றவர்களேயும் குறிப்பிடுமா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினருக்கு ஆங்கிலம் தெரியுமென்று நினைக்கிறேன். எந்த வருஷம், எந்த இடம் என்று பதில் சொன்னேன். அவர்களுக்கு அது புரிந்திருக்குமென்று நினைக்கிறேன்."

SRI K. MOOKKIAH THEVAR :—" இந்தக் கேள்வி கேட்ட வருஷத்தைப் பற்றித்தான் பதில் சொன்னேன் என்று கனம் மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படியானல் அதற்கு முன்னால் ஏதாவது மனுக்கள் வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால், அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த ஆண்டுகளேப் பற்றித் தனியாக ஒரு கேள்வி கேட்டால், ஒவ்வொரு வருஷமாகப் பார்த்து பதில் சொல்லலாம்."

SRI V. BALAKRISHNAN :—" 20 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டதில், இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து எவ்வளவு தொகை சர்க்கார் வசூலித்தார்கள் ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The value of the forest growth estimated at Rs. 10 per area was collected."

Loan applications under N.E.S. Scheme.

* 1732 *Q.*—SRI M. DHARMALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of loan applications received from the Zamin villagers in Kadambathur, Uthukottai and Trivellore Blocks under the National Extension Service Scheme; and

(*b*) the number of applications sanctioned?

30th March 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—

" (a) Kadambathur	780
Uthukottai	56
Trivellore	483
Total ...	1,319

" (b) Kadambathur	451
Uthikottai	23
Trivellore	307
Total ...	781 "

SRI M. DHARMALINGAM :—" Sir, may I know from the Hon. Minister whether the villagers living in zamindari villages whose lands were not surveyed have been given loans under the National Extension Service Scheme? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" They are sometimes given loans. But mostly the loans are refused on account of failure to pay survey fees in respect of unsurveyed security lands. I may add, Sir, that the survey of the estate villages is in progress and if the applicants who want to take advantage of the re-survey now being made by the Government only renew their applications after the survey is over, they will be considered."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" May I know from the Hon. Minister the actual amount that has been disbursed to the various tenants applicants on the applications made by them? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I should like to have notice."

SRI S. RAMALINGAM :—" இனாம் கிராம விவசாயிகள், தங்களுக்கு கடன் வசதி வேண்டுமென்று சர்க்காரிடம் கேட்டால், கொடுக்க மறுக்கப் படுகிறது. அவர்களுக்கும் இந்த வசதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதைப்பற்றியும் யோசிக்கலாம்."

SRI K. R. NALLASIVAM :—" இந்தக் கடன் வகையறுக்களில் பலவகையான மனுக்கள் போடவேண்டி யிருக்கிறது. ஆனால் கூட்டுப் பட்டாக்காரர்களுக்குப் பலவித நிபந்தனைகள் சொல்லப்படுகிறது. இவர்களுக்குச் சட்டங்கள் கடுமையாக இருப்பதால் கடன் வாங்குவதற்கு முடியாமல் இருக்கின்றது. ஆகவே இந்த நிபந்தனைகளின் அடிப்படையை மாற்றி, இந்தக் கூட்டுப் பட்டாக்காரர்களுக்கும் தக்காவிக் கடனை மற்றவர்களைப்போல் கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ? "

[30th March 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கூட்டுப்பட்டா என்ற ஒரு சிரமம் மட்டுமல்ல. யார் வேண்டுமானாலும் மனுப்போட்டால் அவர்களுக்கெல்லாம் கடன் வசதி செய்து கொடுக்க முடியாது. இவையெல்லாம் பரிசீலனை செய்து, அதற்குத் தகுந்தவாறு கடன் கொடுக்க முடியுமே தவிர, யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்பதற்காக, அதற்குத் தகுந்தவாறு அடிப்படை விதியை மாற்றுவது என்றால் அது சரியல்ல."

SRI M. DHARMALINGAM :—" The agriculturists living in ryotwari villages are enjoying the facilities given under Agricultural Loans Act, whereas the villagers living in zamindari villages have not been given such opportunities by the Government for the simple reason that these villages have not been surveyed. Will the Government consider the desirability of giving loans basing upon the personal security?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" That may be examined. But I can assure the hon. Member that my hon. Colleague, the Minister for Revenue, is taking every possible step to expedite the survey of these zamindari lands."

SRI M. NARAYANA KURUP :—" Sir, are not the Government aware that patta is not evidence of title and there is very often wrong registration of pattas and they are not the real owners?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" That is true, Sir. Patta is not the evidence of title of the person in whose name it stands. But at the same time that will not offer evidence in favour of the applicant who has not got patta at all."

SRI S. RAMALINGAM :—" ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் சொந்தமாக இருந்து, அதற்கு வேண்டிய போதுமான டாகுமென்டுகளும், ரிகார்டுகளும் இருந்தாலும்கூட, பட்டா இல்லை எனபதற்காக கடன் வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை. அல்லது கூட்டுப்பட்டாவாக இருக்கிறது என்பதற்கும் மறுக்கப்படுகிறது. அதைத் திருத்தி டாகுமெண்ட் செகியூரிடி, நில செகியூரிடி இருந்தாலே அதன் பேரில் நிபந்தனையின்றி கடன் வசதி செய்து கொடுப்பார்களா? ஏனென்றால் பட்டா வாங்குவது என்றால் ரொம்பவும் சிரமமாக இருக்கிறது. ஒரு எக்கர் நிலம் துண்டாக இருக்கும், ஒரு 15 எக்கர் நிலம் ஒன்றாக இருக்கும். ஒரு எக்கர் வைத்திருப்பவர் கையெழுத்து போட மறுத்தால், பட்டா செய்து கொடுக்கப்படுவதில்லை. இந்தக் கஷ்டங்களெல்லாம் இருப்பதால், பட்டா கேட்பதை நிறுத்திக்கொண்டு, நிலம் சொந்தமென்றிருந்தாலே கடன் வசதி செய்து கொடுப்பார்களா?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் சீக்கிரத்திலே சர்வே செய்து கொடுத்தால், இந்தக் கஷ்டங்களெல்லாம் வராது."

Harijans' localities in Chidambaram taluk.

* 1665 *Q.*—SRI G. VAGHEESAM PILLAI : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether there is any scheme to extend the areas of the localities where Harijans live in Chidambaram taluk;

(*b*) if so, the number and names of the villages included in the scheme; and